## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calender Case No. 1 of 2024

Deposition of witness for : PW9

Name : செல்வம்

Father's Name : சின்னசாமி

Village : தொட்டலாம்பட்டி

Taluk : தருமபுரி

Calling : கூலி வேலை

Age : 37

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.

**எதிரிகள் 1 முதல் 6 வரை ஆஜர் 7ம் எதிரி ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தொட்டலாம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 1/2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 3 மணிக்கு காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவமனையில் நாங்கள் டெலிவெரிக்காக சென்று இருந்தபோது சண்டை

நடந்தது. கருணாநிதிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. முனியம்மாள் என்பவரை நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்து நீல நிற சட்டை அணிந்துள்ளவர் ( ராஜ்குமார் ) கையில் எதோ வைத்து இருந்து கண்ணில் அடித்துவிட்டார். கண்ணில் ரத்தம் வந்தது. பின்பு மேல் சிகிச்சைக்காக போலிஸாரை வர வைத்து மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரிக்கு அனுப்பிவைத்தார்கள். போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் தொட்லாம்பட்டி ஆகும். நான் வேலம்பட்டியில் பெண் எடுத்து உள்ளேன். யாருடைய குழந்தை பிறப்பிற்காக மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் எனது சகலையின் மனைவி சுகுணாவின் குழந்தை பிறப்பிற்காக வந்திருந்தேன். மருத்துவமனையில் எப்போதும் கூட்டாமாக இருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவத்தை பார்க்கும்போது 4 மணி இருக்கும் என்றால் 3 மணிக்கு மேல் இருக்கும். கருணாநிதி எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. இந்த ஊருக்கு போக வர பார்த்து உள்ளேன். நான் மருத்துவமனையில் பார்க்கும்போது நீல சட்டை அணிந்துள்ளவர் மட்டும் தான் இருந்தாரா என்றால் மேலும் சில பேர்கள் இருந்தார்கள். கருணாநிதி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவர் சொல்லும் நாள் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் வேலம்பட்டியில் பெண் எடுத்துள்ளதாலும் கருணாநிதி மற்றும் முனியம்மாள் கேட்டு கொண்டதற்கு இனங்க ஜோடணை செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவேரி அரசு மருத்துவமனை அருகிலேயே காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். என்னை காவேரிபட்டிணம் போலிஸார் தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு ஒரு முறை காவேரி பட்டிணம் போலிஸார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை கிருஷ்ணன் உள்ளாரா என்றால் தெரியாது. எதிரிகள் அனைவரும் அங்குஇருந்தார்கள் என நான் கூறுவது போலிஸார் கேட்டு கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீல

சட்டை அணிந்தவர் முனியம்மாவை அடித்ததாக கூறுவதும் ஜோடணை செய்து வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.